**கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேகப் பாதை செயற்திட்டம் - 2012**

---

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் செம்மையாக்கல்களின் தாக்கத்தைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அது பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகள் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவு ரூபா 11,443,421,016 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 33,621,265,488 ஆகவும் இருந்தது. பின்வரும் கூற்று மீளாய்வாண்டிற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பினைக் காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு |
|---|---|---|---|
| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி, உபகரணம் என்பன | 357,610 | 167,240 | 2,810,849 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 52,767,765 | 49,663,246 | 296,723,038 |
| காணியும் காணி மேம்படுத்தலும் | 90,053,482 | 178,110,899 | 2,269,456,176 |
| நடைபெறும் வேலைகள் | 11,058,849,080 | 9,280,310,318 | 30,226,255,365 |
| ஆலோசனை | 241,393,079 | 179,053,743 | 826,020,060 |
| மொத்தம் | 11,443,421,016 | 9,687,305,446 | 33,621,265,488 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவக் கூறுப் பதவியணியினர், உசாத்துணையாளர், ஒப்பந்தகாரர் ஆகியோர் பயன்படுத்துவதற்கென செயற்திட்ட நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள், கணனிகள், தளபாடங்களும் பொருத்திகளும், ஆய்வுகூட உபகரணங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் செயற்திட்டத்திற்குச் சொந்தமானவையானபோதும் அவற்றைப் பட்டியல்படுத்தி வருடாந்தப் பொருட்கணிப்பின் மூலம் அவை இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, செயற்திட்டமானது அவற்றை நடைபெறும் வேலையாகக் கணக்கிற்கு கொண்டுவந்திருந்தத.

செயற்திட்டத்திற்கு ரூபா 377,780,711 கிரயத்தில் 41 மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை 12 ஐபீசீஎஸ் களது மாதிரிச் செவ்வையின் போது புலனாகியதுடன் தற்போதைய நிலையில் அச்சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறு இல்லை எனக் கூற முடியாதுள்ளதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடன் உடன்படிக்கையின் 5 ஆம் உறுப்புரையினது 5.5 பந்தியின் பிரகாரம், கடனைப் பெறுபவர் கடனை வழங்குபவருக்கு வசதிகளின் 0.3 சதவீதத்தை முகாமைத்துவக் கட்டணமாக கடன் உடன்படிக்கை கைச்சாத்தான 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும். ஆகவே, ரூபா 85,490,056 க்குச் சமமான

யூ.எஸ் டொலர் 744,574.05 சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கு அரசாங்கத்தால் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் இத்தொகை வெளிக்கொணரப்படவில்லை.

(இ) கடன் உடன்படிக்கையின் 05 ஆம் உறுப்புரையினது 5.6 ஆம் பந்தியின் பிரகாரம், கடனைப் பெறுபவர் கடனை வழங்குபவருக்கு வசதிகளின் நாளாந்தம் பயன்படுத்தப்படாத பகுதிகளில் வருடாந்த 0.3 சதவீதத்திற்குச் சமமான தொகையைக் கடப்பாட்டுக் கட்டணமாக வழங்க வேண்டும். சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கு 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 84,612,592 க்குச் சமமான யூ.எஸ்.டொலர் 725,252.16 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளபோதும், இத்தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

(ஈ) கடன் உடன்படிக்கையின் 5 ஆம் உறுப்புரையினது 5.7 ஆம் பந்தியின் பிரகாரம், கடனைப் பெறுபவர் கடனை வழங்குபவருக்கு வெளிப்படுத்தல் கட்டணமாக 6 சதவீதக் கட்டணத்தைக் கடன் உடன்படிக்கை கைச்சாத்தாகிய 30 நாட்களுக்குள் வழங்கவேண்டும். ரூபா 1,709,801,154 க்குச் சமமான 14,891,481.19 யூ.எஸ்.டொலர்கள் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கு 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், இத்தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

### 3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடனான செயற்திட்டத்தின் நடைமுறைக் கணக்குகளின் ரூபா 4,466,735 மீதியானது அதனோடு தொடர்புடைய வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பேணப்படும் செயற்திட்ட நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 5,046,140 நேரொத்த மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

## 4. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

மேலே 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, அதிவேகப் பாதையின் ஒட்டுமொத்த நிர்மாண வேலைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க கடன் உடன்படிக்கைகளும் ஒப்பந்த உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டிருந்தன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவிற்குமான நிதி ஒதுக்கீடும் அவற்றின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடும் கீழே காட்டப்பட்டள்ளன.

| ஒப்பந்த இலக்கம் | மையளவு (கி.மீற்றர்) | உடன்பட்ட கடன் தொகை | | ஒப்பந்தத்தின் பெறுமதி | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | யூஎஸ். டொலர் | ரூபா | யூஎஸ். டொலர் | ரூபா | யூஎஸ். டொலர் | ரூபா |
| I | 0+000 to 4+500 | 70,041,527 | 7,704,567,970 | 82,401,797 | 9,064,197,670 | 48,682,556 | 3,994,609,266 |
| II | 4+500 to 10+900 | 63,573,815 | 6,993,119,650 | 74,792,723 | 8,227,199,530 | 44,565,329 | 3,685,625,021 |
| III | 10+900 to 16+800 | 47,801,344 | 5,258,147,840 | 56,236,875 | 6,186,056,250 | 33,652,735 | 2,787,119,863 |
| IV | 16+800 to 25+800 | 66,783,314 | 7,346,164,540 | 78,568,605 | 8,642,546,550 | 46,192,769 | 3,895,361,375 |
| **மொத்தம்** | | **248,200,000** | **27,302,000,000** | **292,000,000** | **32,120,000,000** | **173,093,389** | **20,054,627,135** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உடன்பட்டவாறு 2012 நவெம்பர் மாதமளவில் செயற்திட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்க முடியாதிருந்ததுடன் அது 2013 ஆகஸ்ட் 24 வரை 09 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. எவ்வாறாயினும், திருத்தத்திற்குள்ளான காலப்பகுதியின்போதும் செயற்திட்டத்தை பூர்த்தியாக்க முடியாதிருந்தது.

(ஆ) செயற்திட்ட நிர்மாண வேலையானது சகலவற்றையும் உள்ளடக்கியதொரு ஒப்பந்தமாகச் செயற்படுத்தப்பட்டது. ஆகவே, விசாரணைகள், அளவைகள், வடிவமைப்பை தயாரித்தல், வரைபடங்கள், நிர்மாணங்கள் போன்ற யாவற்றையும் ஒப்பந்தகாரரே மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், பின்னர் வேலைக்குரிய மூலப்பரப்பெல்லையில் ஹுனுப்பிட்டியவில் உள்ள கட்டுநாயக்காத் திருப்புமுனைப் பாலம், புகையிரதப் பாதை பாலம் போன்றவற்றில் ஏற்பட்ட உள்ளக மாற்றங்களாலான உருவமைப்பு மாற்றங்களால் ஆரம்ப மதிப்பீட்டுக் கிரயம் அதிகரித்ததுடன் மேலதிக கிரயமானது வேறுபாடுகளாகக் கணிக்கப்பட்டுமிருந்தன. கொடுப்பனவு விபரங்களின் பிரகாரம், அவ்வாறான வேறுபாடுகளுக்குரியதும் 2012 டிசெம்பர் வரை கொடுப்பனவு செய்யப்பட்டதுமான ரூபா 1,886,092,336 க்குச் சமமான யூஎஸ் டொலர் 15,733,096 மற்றும் ரூபா 324,828,313 க்குச் சமமான யுஎஸ் டொலர் 2,555,903 வேறுபாடுகளும் இலங்கை அரசாங்க கடன் மற்றும் வெளிநாட்டுக் கடனில் காட்டப்பட்டிருந்தன.

(இ) யூஎஸ் டொலர் 292,000,000 மூல ஒப்பந்தத்துடனான வேறுபாடுகளுக்குரிய யூஎஸ் டொலர் 44,717,824 அமைச்சரவையால் 2013 ஜுலை 18 ஆந் திகதியன்று

அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆகவே, ஒப்பந்தத்தினது மொத்த கிரயம் யூஎஸ் டொலர் 336,717,825.54 (ரூபா 44,840,712,827) இற்கு 15 சதவீத்தால் அதிகரிப்புக்குள்ளாகியது. கட்டுநாயக்கா மற்றும் ஹுனுப்பிட்டிய ஊடாக பாலம் ஒன்றை அமைத்தல் ஓசீஎச் உள்ளக மாற்று மற்றும் வழி ஜா-எல மற்றும் வழியில் உள்ள டோல் ஸ்டேசன் (Toll Station) ஆகியவற்றிற்கான ஆரம்ப ஒப்பந்தத்தின் உருவமைப்பு மாற்றத்தால் பின்னர் ஏற்பட்ட அதிகரித்த கிரயமே இதில் பெரும் பகுதியாகும். எவ்வாறாயினும், கட்டுநாயக்காவிலும் ஹுனுப்பிட்டியவிலும் ஏற்பட்ட சில நிர்மாண வேலை உருவமைப்பு மாற்றம் தொடர்பாகச் செயற்திட்டம் தொடர்பான காரணங்கள் ஆரம்ப கட்டத்திலேயே இனங்காணப்பட்டிருக்கப்பட வேண்டியனவாகும்.

உதாரணம் : 1 — ஆரம்ப நிர்மாண வேலைத் திட்டத்திற்கமைய, கட்டுநாயக்கா முடிவில் உள்ள கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப் பாதையின் நிர்மாணவேலை நில மட்டத்திலேயே நிர்மாணிக்கப்படவிருந்தது. எவ்வாறாயினும், ஆரம்ப நிர்மாண வேலைத் திட்டம் பின்னர் மாற்று வழிப் பாதையாக மாற்றமடைந்தது. கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப்பாதையில் புகையிரதப் பாதைகள் குறுக்கிடுவதால் செயற்திட்டத்தால் இப்புதிய உருவமைப்பு மாற்றம் செய்யப்பட்டது. புதிய உருவமைப்பு மாற்றத்திற்குச் செயற்திட்டத்தால் செலவழிக்கப்பட்ட மேலதிக கிரயம் யூஎஸ் டொலர் 17,907,460 ஆகும்.

உதாரணம் : 2 — ஆரம்ப நிர்மாண வேலைத் திட்டத்திற்கமைய, ஹுனுப்பிட்டிய புகையிரத நிலையத்தில் நில மட்டத்தில் பாதையை அமைப்பதற்கான ஆரம்ப நிர்மாண வேலைத் திட்டம் இருந்தபோதும், காணி உரிமையாளர்களிடமிருந்து தேவையான காணி கிடைக்கப் பெறாமையால் மாற்று வழிப்பாதை நிர்மாணவேலை அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. நிர்மாண வேலைக்கான மேலதிக கிரயம் யூஎஸ் டொலர் 16,549,085 ஆகும்.

(ஈ) செயற்திட்டத்தின் 292 மில்லியன் யூஎஸ் டொலர் ஆரம்பக் கிரயமானது ஒப்பந்த முரண்கள் காரணமாக, யூஎஸ் டொலர் 336 மில்லியன் வரை யூஎஸ். டோலர் 44 மில்லியனால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், எக்ஸிம் வங்கியுடனான புதிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஆரம்பக் கிரயத்தின் 85 சதவீதத்தை அதாவது யூஎஸ் டொலர் 248 மில்லியனை ஈடு செய்வதற்கு உடன்பட்டிருந்தது. ஆகவே, ஒப்பந்தத்திற்கான மொத்தக் கிரயத்தையும் ஈடு செய்வதற்குச் செயற்திட்டம் ஏறக்குறைய யுஎஸ் டொலர் 88 மில்லியன் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2013 நவெம்பர் 20 இல் உள்ளவாறு தேவையான

மேலதிக நிதியைச் செயற்திட்டத்தால் பெற முடியவில்லை. இதன் விளைவாக, 2013 செப்தெம்பரின் பின்னர் ஒப்பந்தகாரரது இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்களுக்குரிய கொடுப்பனவை மேற்கொள்ள முடியாது போயிற்று.

(உ) செயற்திட்டத்தின் நிர்மாண வேலைத் திட்டத்திற்கமைய, மீளாய்வாண்டு முடிவில் ரூபா 32,120 மில்லியனுக்கு சமமான யூஎஸ் டொலர் 292 மில்லியனான 100 சதவீத வேலையும் முடிவடைய வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்ட உசாத்துணைப் பொறியியாலளரின் முன்னேற்ற அறிக்கைக்கமைய, செயற்திட்டத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறா ஒட்டுமொத்த முன்னேற்றம் 74 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 26,465,504,010 க்கு சமமான யூஎஸ் டொலர் 240,595,491 ஆகும். 50 சதவீதத்துக்கும் குறைவான மெதுவான வேலை முன்றேற்ற விபரம் பின்வருமாறுள்ளன.

| **விடய விபரம்** | **சதவீதமாக 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு எய்தப்பெற்ற முன்னேற்றம்** |
|---|---|
| வடிகாலமைப்புக் குழிகள் | 27.61 |
| | 37.54 |
| அஸ்பால்ட் கொங்கிரீட் நடைபாதை | 33.73 |
| நானாவித | 41.76 |
| கார்ட்ரெயில் (guardrail) | 0.00 |
| தடுப்பு வேலி | 0.00 |
| போக்குவரத்துக் சமிஞ்சைகள் / அடையாங்கள் | 0.00 |
| ரோலிங் முறைமை (Tolling system) | 10.77 |
| பதித்த நீர்க்குழாய்கள் | 40.00 |
| அழகமைப்பும் சுற்றாடலும் | 0.00 |
| இரைச்சலுக்கான தடுப்பு | 0.00 |
| ரோலிங் முறைமை (Tolling system) | 0.22 |
| கண்காணிப்பு முறைமை | 10.00 |
| தொடர்பாடல் முறைமை | 2.00 |
| ஒளியமைப்பு முறைமை | 20.00 |

**4.2 காணிச் சுவீகரிப்பும் மீள்குடியமர்வு நடவடிக்கைகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீதி நிர்மாணவேலைத் திட்டத்திற்கமைய, அதிவேகப் பாதை நிர்மாண வேலைக்கென 2,600 காணித் துண்டுகள் சுவீகரிப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது

எவ்வாறாயினும், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 2,232 காணித் துண்டுகள் மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தன. மேலே குறிப்பிட்டவாறு சுவீகரித்த காணித் துண்டுகளில் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் காணிப் பதிவகத்தில் 1190 காணித் துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) இச்செயற்திட்டத்தின் கீழ் இடம் பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவதற்கென பேலியாகொடவில் உள்ள மீகஹவத்த எனுமிடத்தில் உள்ள காணியைச் சுவீகரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 1,789,015 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. 2012 ஒக்டோபர் 12 ஆந் திகதியன்று தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர் வரி என ரூபா 2,641,105 மீதியும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 நவெம்பர் 14 ஆந் திகியளவிலும் குறித்த காணியின் உரித்து நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றஞ் செய்யப்படவில்லை. காணித் துண்டுகளில் மீளக் குடியமர்த்தப்பட்டோருக்கு உரித்துடமையை மாற்றுதல் தாமதமாயிற்று.

(இ) மேற்படி காணியில் உள்ள 30 காணித் துண்டுகளில் 25 காணித்துண்டுகளில் மாத்திரமே இடம் பெயர்ந்தோர் குடியமர்ந்தமை அவதானிக்கப்பட்டது. 2013 நவெம்பர் 14 இல் உள்ளவாறு 19, 22, 26, 27, 28 ஆம் இலக்கக் காணித் துண்டுகள் வதிவிடப் பாவனைக்குப் பயன்படுத்தப்படாது இருந்தன.

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

---

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டப் பதவியணியினரது எண்ணிக்கை 53 ஆகும். 2005 ஜுலை 01 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் 21 பதவிகளுக்கென 73 அங்கத்தவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும், இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முக்கிய பதவிகளான தலைமைப் பொறியியலாளர், 8 பொறியியலாளர்கள், 3 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், 4 மீள் குடியமர்வு உத்தியோகத்தர்கள், ஒரு பிரமாண அளவையாளர் வெற்றிடமாக இருந்தபோதும், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திராத 3 உசாத்துணையாளர்கள், ஒரு போக்குவரத்து முறைமைப் பகுப்பாய்வாளர் ஆகியோர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) அதிகாரமற்ற மேற்படி 4 உத்தியோகத்தர்களதும் கடமை நிரல், வருகை, செய்த வேலை என்பன கணக்காய்வுச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது ரூபா 2,841,678 சம்பளமாகவும் வாகனக் கட்டணமாகவும் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தினது கடமை நிரல், வருகை தொடர்பான குறிப்புகள், செய்த வேலைக் குறிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.